முருகப்பெருமான் துணை

**மகான் அரிவாட்டய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.11.2021, புதன்கிழமை

1. ஞானக் கடலே அரங்கா
ஞானபண்டிதன் பலமாகவந்த
ஞானச் சுடரே தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே பிலவ தேள் திங்கள்
குறையிலா முதல்திகதி புந்திவாரம்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் முதல் நாள், 17.11.2021 புதன்கிழமை)
தெரிவிக்க துல்லிய ஆசி
தேசிகனுக்கு அரிவாட்டய நாயனாரும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் காட்டும்
ஞான நெறி வல்லமைதரும்
ஞானபண்டிதன் அருளும் ஞானமாக இருக்க
4. இருக்கவே கலிவாழ் மக்கள்
எங்கென பிரணவக் குடிலை
கருத்தெனக் கண்டுத் தேடி
கருணைபட அருள்வாய் என வேண்டி
5. வேண்டி உலகோர் வந்துமே
வேலவன் அம்சமான அரங்கன்
தொண்டில் கலந்து உதவி
தொடர் சேவை ஆற்றி வர
6. வருவதுடன் தரும வேலி எனும்
வள்ளல் தன்மை நிறைந்த
குருவரங்கன் அன்னதானமதை
குவலயமெங்கும் கொண்டு செல்ல
7. செல்லவே உலகமக்களனைவருக்கும்
சேவைவழி நல்ல பாதுகாப்பும்
இல்லையெனும் நிலைஎன்பதிலா
எல்லா வகையும் சிறந்துமே
8. சிறந்துமே ஞானிகள் பேரில்
சிறப்பு பூசைகள் தொடர
சிறந்த வகை மேலவர் தொடர்பு
சிறப்பறிவு கூடி தேறுவர்
9. தேற்றம் தரும் தெய்வ சக்தியாக
தேவர்கள் போற்றும் ஞானசக்தியாக
மாற்றம் தரும் மகா தவசியாக
மண்ணுலகில் அரங்கஞானி இருக்க

10. இருக்கவே ஞானமுடன் கூடிய
இணையிலா தவதரும சக்தியாக
கருத்தாக அருளும் அரங்கன்
கண்ணியமிக்க சன்மார்க்கமே

11. சன்மார்க்கமே மக்களை மீட்கும்
சகலவகையும் காக்கும் வழியாகும்
உண்மைபட மக்கள் ஏற்றிட
உலகம் சடுதி மாற்றம் பெறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–